மொழிவுகளை வங்கியின் அங்கீகாரத்திற்கு நிர்வாகம் அனுப்ப வேண்டும் என்றும், வங்கி இதைப் பரிசீலித்து விரைவில் முடிவு எடுக்கவேண்டும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

6. மேற்கொண்டு முன்னேற்றம்பற்றி நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகிறது. பிரச்சினைகளில் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாண அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஊ) பாலேகர் பரிந்துரையை சில பத்திரிகை நிறுவனங்கள் அமுல்படுத்தாதது :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் வி. பி. சிந்தன், கோ. வீரய்யன, எம். செல்லமுத்து மற்றும் ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. வி. பி. சிந்தன் : தலைவர் அவர்களே ''தமிழ்நாட்டிலுள்ள பகுதி நேர பத்திரிகை நிருபர்களுக்கு சம்பளம் வழங்குவது குறித்து மத்திய அரசு பாலேகர் கமிஷனை நியமித்து அதன்படி சம்பளம் வழங்க வேண்டுமென்ற அரசாணையை அமுல் நடத்த நிர்வாகத்தினர் மறுப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

இம் மாநிலத்தில் மொத்தமுள்ள 129 பத்திரிகை நிறுவனங்களில் 116 பத்திரிகை நிறுவனங்கள் பாலேகர் பரிந்துரையை முழுவதுமாக அமுல்படுத்துவதாக அறிவித்துள்ளன. மோட்டார், ப்ரி இந்தியா ,சாவி, மோனா, இண்டஸ்ட்ரியல் எரால்டு, அமுதசுரபி ஆகிய ஆறு நிறுவனங்களும் பாலேகர் பரிந்துரையை முழுமையாக அமுல் படுத்தாமல் பகுதியாக அமுல்படுத்துகின்றன. இந்நிறுவனங்களுக்கு முழுமையாக பரிந்துரையை அமுல் செய்ய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. கலைக்கதிர், கிராம இராஜ்யம், யுவபாரதி, பேசும்படம், பிக்சர் போஸ்ட், கலைமகள், மஞ்சரி ஆகிய ஏழு நிறுவனங்கள் பாலேகர் பரிந்துரையை முழுமையாக அமுல்படுத்தாத நிறுவனங்கள் ஆகும். இவற்றில் கலைக்கதிர், கிராம இராஜ்யம், யுவபாரதி ஆகியவை தங்க

1987 ஏப்ரல் 23] [திரு. ச. இராமச்சந்திரன்]

ளிடம் உழைக்கும் பத்திரிகையாளர் இல்லை என்றும் தங்களுக்கு பாலேகர் தீர்ப்பு பொருந்தாது எனவும் வாதிட்டு வருகின்றன. செயல்படுத்தாத நிறுவனங்கள் மீது வழக்கு தொடருமாறு ஆய்வாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

2. பிக்சர் போஸ்ட், பேசும் படம், கலைமகள் மற்றும் மஞ்சரி நிர்வாகங்கள் பாலேகர் தீர்ப்பு அமுலாக்கத்தை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு கொடுத்துள்ளன. வழக்கு நிலுவையில் உள்ளது.

திரு. வி. பி. சிந்தன்: தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிற தகவல்கள் உண்மைக்கு மாறானதாக அமைந்திருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த மாநிலத்தில் மொத்தமுள்ள 129 பத்திரிகை நிறுவனங்களில் 116 பத்திரிகை நிறுவனங்கள் பாலேகர் பரிந்துரையை முழுவதுமாக அமுல்படுத்துவதாக அறிவித்துள்ளன என்றுதான் இங்கே போடப்பட்டிருக்கிறது. அது ஒரு வேளை அந்தப் பத்திரிகை நிறுவனங்களின் நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டதாக இருக்கும். உண்மையில் இரண்டு மூன்று ஆங்கில ஏடுகள் இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற ஆங்கில ஏடுகளும் தினமணி, தினத்தந்தி, தினமலர் போன்ற தமிழ்ப் பத்திரிகைகளும்தான் அமுல்படுத்துகின்றன. மற்றப் பத்திரிகைகள் அமுல் நடத்துவதில்லை. அது குறித்து ஒரு விரிவான ஆய்வு நடத்துவதற்கும் அந்தப் பத்திரிகை நிருபர்கள் அமைப்புகளுடனும், உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கத்துடனும் கலந்து பேசி இந்த முடிவை அமுல் நடத்துவதற்கும் ஒரு நடவடிக்கையெடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, 129 பத்திரிகை நிறுவனங்களில் 116 பத்திரிகை நிறுவனங்கள் பாலேக்கர் பரிந்துரையை முழுவதுமாக அமல்படுத்துவதாக அறிவித்துள்ளன என்பது தகவல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் சொல்லுகிறபோது அதை நிர்வாகம் அறிவித்திருக்கலாம் என்று சொன்னார்கள். அதுதான் பத்திரிகை சுதந்திரம். அந்த நிர்வாகம் உண்மையில் இந்த பாலேக்கர் பரிந்துரையை அமுல்படுத்துகிறதா என்பதைப்பற்றி சம்பந்தப்பட்ட உழைக்கும் பத்திரிகையாளர் சங்கங்களோடும் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களோடும் கலந்து பேசி பாலேக்கர் அவார்டை எப்படி அமுல் படுத்துவது என்பதைப் பற்றி அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பரிந்துரையை வெளியிட்டதற்குப் பிறகு, மத்திய அரசு அதை அமுல் நடத்தாமல் இருக்கும் மாநில அரசுகளுக்கு பரிந்துரை வழங்கியதற்குப் பிறகு, குறிப்பாக தமிழகத்திலே முழு நேர நிருபர்களாக வேலை செய்துகொண்டு இருந்தவர்களை பகுதி நேர ஊழியர்கள் என்று வைத்துக்கொண்டு பல முறைகேடான நடவடிக்கைகளைக் கடைப்பிடித்து, இந்தச் சட்டத்தை மீறி இந்தப் பரிந்துரையில் உள்ள சலுகைகளை ஊழியர்களுக்குக் கொடுக்காமல் இருப்பதைத் தடுக்கக்கூடிய முறையில் தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, முதலாளிகள் எந்தத் துறையிலே இருந்தாலும் ஒவ்வொரு வகையிலே நடந்து கொள்வார்கள். பத்திரிகைத் துறையிலேயும் அவர்கள் விதிவிலக்கல்ல. அரசு தக்க நடவடிக்கையை எடுக்கும்.

(எ) பெரம்பலூர் வட்டம் விசுவக்குடியில் அரசுத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகளின் நிலை

டாக்டர் க. நல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பெரம்பலூர் வட்டம், அன்னமங்கலம் ஊராட்சியைச் சேர்ந்த விசுவக்குடி கிராமத்தில் என்.ஆர்.இ.பி. மற்றும் ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட 50 வீடுகள் குடியேறுவதற்கு முன்பே மிகவும் மோசமான நிலையிலிருப்பது குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

திருச்சி மாவட்டம், வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியம் விசுவக்குடி கிராமத்தில் 1983–84ம் ஆண்டு தேசீய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 25 வீடுகளும், 1984–85 ஆம் ஆண்டு ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் 29 வீடுகளும், தலா ரூ. 6,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டன. கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் உரிமையாளர்களிடம் கையொப்பம் பெற்று ஒப்படைக்கப்பட்டன. ஆனால், கடந்த ஆண்டு ஏற்பட்ட திடீர் சூறாவளிக் காற்றினால் சேதமடைந்த 5 வீடுகளில், 3 வீடுகள் பழுதுபார்க்கப்பட்டு வீட்டின் சொந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களும் தற்சமயம்